**OS. 22/2024**

**நாள். 29.01.2026.**

**வா.சா.2 – கோகுலகண்ணன், த/பெ.கேசவன்**

<u>2, 3ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்து ஏற்கனவே 2ம் பிரதிவாதி சாத்தையாவுக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தது என்றால் சரிதான். வாதி சுப்ரமணியன் என்னுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்தை என் சகோதரர் வாதி சுப்ரமணியன் கிரையம் பெறுவது சம்மந்தமாக 2ம் பிரதிவாதியிடம் பேசப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பேசப்பட்ட பிறகு 2ம் பிரதிவாதி வயதானவர் என்பதால் அவரிடம் கிரையம் பெறுவது சரியாக இருக்காது என்பதால் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு ஒரு இனாம் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து கிரைய உடன்படிக்கை ஆவணம் வாதி 2, 3ம் பிரதிவாதிகளிடம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர்களின் சம்மதத்தை கேட்டுத்தான் 1ம்பிரதிவாதியிடம் கிரையஉடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார். 1ம் பிரதிவாதியிடம் கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு வாதி 2, 3 பிரதிவாதிகளிடம் ரூ.35 இலட்சம் கொடுத்ததாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. வெவ்வேறு தேதிகளில் வாதியிடம் 2, 3 பிரதிவாதிகள் பணம் பெற்று கொண்டதற்கு நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அந்த ஆவணத்தை எழுதினேன். 2ம் பிரதிவாதி வயதானவர் என்பதால் கிரையம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறான சூழ்நிலையில் 2, 3 பிரதிவாதிகளிடம் வாதி ரூ.35 இலட்சம் வெவ்வேறு தேதிகளில் கொடுத்ததாக சொல்வதும், அந்த ஆவணத்தை நான் எழுதியதாக சொல்வதும் வாதி என் சகோதரர் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.